★ பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லை ★ பின்னணியில் சூழ்ச்சி உண்டு

# தமிழ்மக்களின் தனிநாட்டுக்கு நவசமசமாஜ ஆதரவு

(அலுவலக நிருபர் இ. பாரதி)

"தமிழ் பேசும் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு பூரண உரிமையுடையவர்கள் என்பதை நவ சமசமாஜக் கட்சி ஏற்றுக் கொள்கிறது. தமிழர்கள் அனைவரும் விரும்பி அப்போராட்டத்தில் ஈடுபட்டால் எமது கட்சியும் அப்போராட்டத்திற்கு ஆதரவளிக்கும்.'' என்று நவ சமசமாஜக் கட்சியின் இரு பொலிட் பீரோ உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார்கள். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமையை நேரில் அறிந்து செல்வதற்காக இங்கு வந்துள்ள நீல் விஜயதிலக்க, சிறில்துங்க ஜயசூரிய ஆகியஇவ்விரு நவசமசமாஜக்கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர்களும் யாழ். நகரில் நேற்று பத்திரிகையாளர்களின் மாநாடு ஒன்றையும் நடத்தினர்கள். 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் தனி ஈழக்கோரிக்கையை ஏற்றுள்ளார்கள்தானே? எனக்கேட்கப்பட்ட போது அதன் மூலமாக மட்டும் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் எனக்கூற முடியாதென திரு. நீல் விஜயதிலக விளக்கினர். உத்தேச மாதாணசபை பற்றியும், அரசுக்கும், கூட்டணிக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகள் பற்றியும் —6 ஆம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 27-8-86 புதன் (ஆவணி 11 துல்ஹஜ 20) முழக்கம் 204

## இன்றுமௌனஊர்வலம்

யாழ். கோட்டையிலுள்ள இராணுவ முகாமை அகற்றுமாறு கோரி மௌன ஊர்வலமும் கடையடைப்பும் யாழ். நகரில் இன்று நடைபெறவுள்ளது. யாழ். மக்கள் நடவடிக்கைக் குழுவினல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மௌன ஊர்வலம் யாழ். புகையிரத நிலையம் முன்பாக ஆரம்பமாகி யாழ். அரசாங்க செயலகத்தில் சென்று முடிவடையும். நமது பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அனைவரும் அணிதிரண்டு ஊர்வலத்தில் பங்குபற்றி அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும்படி மக்கள் நடவடிக்கைக் குழு கேட்டுக்கொண்டுள்ளது. வேறு பல பொது அமைப்புக்களும் இவ் ஊர்வலத்திற்கு ஆதரவளித்துள்ளன.

★ கிரானில் மரணச் சடங்கிற்கு சென்றபோது

# மயானத்தில் கைதான 9 இளைஞர் சுட்டுக் கொலை

## புலிகளின் கண்ணிவெடிக்கு நான்கு ராணுவத்தினர் பலி

மட்டக்களப்பு கிரான் குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்ட ஒன்பது தமிழ் இளைஞர்கள் மயானத்தில் வைத்து ராணுவ கொமாண்டோக்களால் கூட்டிச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் விடுதலைப் புலிகளால் நடத்தபபட்ட கண்ணிவெடித் தாக்குதலொன்றில் நான்கு ராணுவத்தினர் பலியாகினர்.

முதலில் கிடைத்த செய்திகளின்படி ஆறு இளைஞர்களே கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதாயினும் பிந்திக் கிடைத்த செய்திகள் ஒன்பது பேருமே கொல்லபபட்டதாக தெரிவித்துள்ளன. இவர்கள் அனைவரும் மரணச் சடங்கில் பங்குபற்றிய அம்பாவிகள் என்று தெரிவிக்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி முகாமிலிருந்து அதிரடிப்படையினர் ரோந்து சென்றபோது கிரான் — 6ஆம் பக்கம் பார்க்க

## முறிகண்டி: 4 விவசாயிகள் ராணுவம் சுட்டுக் காயம்

(வன்னிப்பண்ணை)

முருகண்டி காட்டுபபாதையோர மரங்களில் மறைந்திருந்து இராணுவத்தினர் துப்பாககிப் பிரயோகம்செய்ததில் நால்வர் படுகாயமடைந்தனர். இவர்கள் சென்றுகொண்டிருந்த மினி வானும் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் இரவு ஸ்கந்தபுரத்திலிருந்து அறுவடை செய்த நெல் மூடைகளை — 6ஆம் பக்கம் பார்க்க

## ஈழநாடு நிருபர் கந்தசாமி தடுப்புக் காவலில் 100 நாள்

ஈழநாடு பத்திரிகையின் கொழும்பு நிருபர் திரு இ. கந்தசாமி ராணுவத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு நேற்றுடன் நூறு நாட்கள் முடிவடைந்துள்ளன. தனியார் பஸ் ஒன்றில் இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள் சிலவற்றைப் பார்ஸலாகக் கொடுத்துவிட்டது தொடர்பாக விசாரணைக்கெனக் கடந்த மே மாதம் 14-ம் திகதி பொலிஸாரால் அழைக்கப்பட்ட திரு. கந்தசாமி, மறுதினம் கொழும்பிலிருந்து ஹெலிகப்டர் மூலம் அனுராதபுரம் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். குறிப்பிட்ட பஸ்ஸின் ஊழியர்களும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## கூட்டணியை கோட்டைக்கு வருமாறு அதிகாரி அழைப்பு

யாழ். நகரில் இராணுவத்தினரின் தேவையற்ற ஷெல் தாக்குதலினல் கடந்த சில நாட்களில் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ள கருத்தை இராணுவ உயரதிகாரி ஒருவர் மறுத்துள்ளார். தீவிரவாதிகள்தான் இராணுவத்தினரின் மீது தாக்குதலை மேற்கொள்கின்றார்கள். தீவிரவாதிகள் சிறுபீரங்கிகளைக் கொண்டு இராணுவத்தினரின் மீது தாக்குதலை நடாத்தி அவர்களை ஆத்திர மூட்டுகிறார்கள் என அந்த அதிகாரி தெரிவித் ...6ஆம் பக்கம் பார்க்க

## பொம்பர் தாக்குதலில் சிறுவர்காயம்

(வன்னிப்பண்ணை)

உருத்திரபுரத்தில் 'எல்வ்' வானில் சென்றுகொண்டிருந்தவர்கள்மீது 'பொம்பர்' விமானம் துரத்தித்துரத்தி குண்டுகள் போட்டது. இரு சிறுவர்கள் இதனல் காயமடைந்தனர். நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள உருத்திரபுரம் எனும் இடத்தில் ஹெலிகப்டரும் பொம்பர் விமானமும் குண்டுகள் போட்டதில் சில கட்டிடங்கள் சேதமுற்றதுடன் பாலசுந்தரம் பிரகாஷ் (13வயது) உருத்திரபுரம் —6ஆம் பக்கம் பார்க்க

## சடலங்கள் ஒன்ருக அடக்கம்

(வன்னிப்பண்ணை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோட்டை இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதலின் போது மரணமான பிரபல பத்திரிகை விற்பனையாளர் ஜே. ரி. பீரிஸ் என்பவரின் சடலமும், இவரது சகோதரியான யோசேப்பின் பீரிஸ் (25வயது) சடலமும் ஒன்ருக நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

## அமிர்: "கொழும்பு பேச்சுக்கள் இவ்வாரத்துடன் முடிவடையும்"

கூட்டணியினருக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் இறுதி முடிவு எதுவும் காணப்படாமலேயே நாளை மறுதினம் வெள்ளிககிழமையுடன் முடிவடையலாம்.

வெள்ளி இரவு அல்லது சனி காலை விமானத்தில் தாங்கள் சென்னை பயணமாகவிருப்பதாக திரு. அமிர்தலிங்கம் நேற்றிரவு தெரிவித்தார்.

நேற்றுக் காலை இரண்டு மணி நேரமும், மாலை சுமார் மூன்றரை மணி நேரமும் இரு தரப்பினரும் பேசினர்.

"இவ் வாரத்துடன் கொழும்பு பேச்சுக்கள் முடிந்துவிடும். சிலவேளை கொழும்பு அதிகாரிகள் டில்லி சென்று பேச்சுத் தொடரலாம். அதற்கு மேல் சொல்ல எதுவுமில்லை'' எனவும் திரு. அமிர்தலிங்கம் சொன்ஞர்.

## கோட்டை மதகின் கீழிருந்த குண்டுகளும் வயர்களும் ராணுவத்தினரால் மீட்பு

யாழ். பொலிஸ் நிலையம், கோட்டை முகாமுக்கு செல்லும் பிரதான பாதை மதகுக்கு கீழ் காணப்பட்ட சில வயர்களும் குண்டு வெடிப்பு தடயப் பொருட்களும் ராணுவத்தினரால் நேற்று எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்றைய தினம் ஓய்வூதியம் பெறுவதற்காக கோட்டைக்கு சென்றவர்களை பாதுகாப்பாக தம்முடன் இப்பாலத்துக்கு அருகில் அழைத்து வந்தே அவர்கள் இவற்றை எடுத்துச் சென்றனர்.

ராணுவ சீருடையின்றி சாதாரண உடையில் இவர்கள் ஓய்வூதியம் பெறுவோருடன் 6ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் ஆசிரியர் சங்கம் கூட்டு குழுவிலிருந்து பிரிந்தது

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடபிரதேசத் தொழிற் சங்கக் கூட்டுக் குழுவிலிருந்து பிரிந்து செல்வது என தீர்மானித்துள்ளது.

வடபிரதேசத் தொழிற் சங்கக் கூட்டுக் குழுவில் அங்கம் வகித்த தொழிற் சங்கங்களில் தேசிய தொழிற் சங்கமாக அங்கம் வகித்த ஒரேயொரு தொழிற் சங்கம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. இக் கூட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய அமைப்புக்கள் மாவட்ட தொழிற் சங்க அமைப்புக்களேயாகும்.

வட பிரதேசக் கூட்டுக் குழுவிலிருந்து இ. த. ஆ. சங்கம் —6ஆம் பக்கம் பார்க்க

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க், ★ கனடா.

(வாரத்துக்கு இருமுறை)

எமது முகவர் குறுகிய காலத்துக்குள் அழைத்துச் செல்கிறார்,

சவூதி அரேபியா, அபுதாபி ஆகிய நாடுகளுக்கு ஹாபர் கிளினஸ், பிளாஸ்ரிக் கொம்பனி, ஹோட்டல், ஆகியவற்றிற்கு குறுகிய காலத்துக்குள் பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது. உடன் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

V. அம்பிகைபாகன்
முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

N. சிவஞானம்
மகாவித்தியாலய அருகாமை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை,

R/25351

---

ST. JOHN'S COLLEGE, JAFFNA
AND
CHUNDUKULI GIRLS' COLLEGE, JAFFNA.

**ADMISSION- 1987.**

1) Vacancies exist, ONLY in the following Classes:-
   (a) Year One and Year Seven (St. John's & Chundukuli Girls' College).
   (b) Year Ten (Only St. John's College).
2) Children born between 01/02/1981 and 31/01/1982 only will be considered for admission to Year One. Birth Certificate should be annexed along with the Application Form.
3) Pupils to be considered for admission to Year Seven should be below the age of twelve on 31/01/1987.
4) Pupils to be considered for admission to Year Ten should be below the age of fifteen on 31/01/1987.
5) Apply before the 13 th of September, 1986 on forms available from the respective Schools from the 3rd of September, 1986. Application made on any other forms will not be considered.
6) Please send stamped, self-addressed long envelope and Postal Order drawn in favour of the "Principal" of the respective Schools for Rs. 20/- per Application form for Year Seven and Year Ten, and Rs. 10/- for Year One
7) Admission Test (for Year Seven and Year Ten) will be held at 8. 30 a. m. on Saturday the 11 th October, 1986.

B/ 1460 PRINCIPALS.

---

## மத்திய கிழக்கில்

### உடனடி வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

1. யோர்தான்—யோர்தான் அரசினால் பரிபாலிக்கப்படும் விமான நிலையம், ஆஸ்பத்திரி, பாடசாலை முதலிய நிறுவனங்களில் சுத்திகரிப்பாளர் (CLEANERS) பதவிகள். வயதெல்லை:-18-35

2. சவுதி அரேபியா—SAUDI CATERING COMPANY யில் பொது உதவியாளர் (GENERAL HELPERS) பதவிகள். வயதெல்லை:-20-40

மேற்படி நாடுகளுக்கு நியாயமான, குறைந்த கட்டணங்களில் துரிதமான பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. விபரங்களுக்கு 29 ம் திகதிக்கிடையில் என்னுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**எஸ். அன்ரன் முத்துக்குமரன்**

சந்திக்கும் நேரங்கள்:-

காலை 10 00—மாலை 2 30 மணிக்கிடையில்.
119 1/1 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
(மைலன்ட் கட்டிட மேல்மாடி, புத்தகசாலை அருகே)

மாலை 6 00 மணிக்குப் பின்:-
வேளாங்கண்ணி மாதா கோவில் ஒழுங்கை
கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை.

R/25356

---

## பிறந்தநாள் வாழ்த்து

கொடிகாமம், சண்முகராசா சின்னக்கிளி தம்பதியின் மகன் செந்தூரன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## வரி விளம்பரம்

**திட்டப்பரிசு பெறுபவர்**

அங்கத்துவ நண்பர்களினால் தெரிவு செய்யப்பெற்று இம் மாதத்துக்குரிய ரூபாய் ஓராயிரம் பரிசுக்குரியவர் சிவமணி தேவி இரத்தினம், C. நாகலிங்கம் அவர்கள் மேற்பார்த்து "கைலாசபதி" சுதுமலை வடக்கு மானிப்பாய் இத்திட்டம் எவ்வித மூதலீடுகளுமின்றி தினசரி வருவாய்/மாதாந்த அதிஷ்டம் / ருதுவானாலும் / திருமணமானாலும் / பிரசவமானாலும் / விபத்தானாலும் / அந்தியகாலமானாலும் கடன் வசதிகளும் நன்கொடைகளும்நிறைந்ததிட்டமிது. சேராதவர்கள் உடனடியாகச் சேரலாம். மேலும் விபரங்களுக்கு பிரதம இயக்குநர் லக்கி பெனிபிட் கோ. லிமிட்டட் பொதுச்சந்தை கோப்பாய். R/25359

---

## A/L 87

தூயபிரயோக கணிதம்

பகல்நேர வகுப்பு:

ஆரம்பம்: 5-9-86

10-30 : காவிகள்
11-45 : அட்சர கணிதம்

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

R/25352

---

## மானிப்பாயில் இன்று

மானிப்பாய் தெற்கு சாயி மண்டலியினால் இன்று கனக சபை வீதியில் அமைந்துள்ள தியானமண்டபத்தில் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படும்.

## ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி

(சரசாலை)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று புதன்கிழமையன்று ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இரவு விசேடபூஜைகளும் நடைபெறவுள்ளன.

## வயர்கள் எரிப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதியில் சட்டவிரோதமாக நடைபெற்று வந்த மின்பாவனை, சராயவிற்பனை, மாட்டிறைச்சி விற்பனை ஆகியவற்றுக்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு வருகிறது. சட்டவிரோத மின்பாவனை வயர்களை அபிவிருத்திச் சபை உப அலுவலக ஊழியர்கள் பல இடங்களில் பறிமுதல் செய்து தீயிட்டுக் கொழுத்தினர்.

இம் முயற்சியின் போது ஊழியர்களை மிரட்டிய நபர்களை விடுதலை இயக்கமொன்று கடுமையாக எச்சரிக்கை செய்தது. இதேவேளை சட்டவிரோத மாட்டிறைச்சி விற்பனையையும் சராய விற்பனையையும் நிறுத்துமாறு இளைஞர் குழுவொன்று சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதை தொடர்ந்து இவ்விரண்டின் விற்பனைகளும் முற்றாக நிறுத்தப்பட்டன.

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

வாசவன் (27. 8. 86.)

முரசுமோட்டையைச் சேர்ந்த ரகுநாதசர்மா ருக்மணிபாமா தம்பதிகளின் செல்வப்புதல்வன் வாசவன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (27 8 86) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணா, தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், மச்சாள் அனைவரும் முருகன் அருள்பெற்று சகல கலைகளையும் கற்று நீடூழிவாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

B/1491

---

## அவசர தேவையா?

★ பாஸ்போட்
★ பொண்ட்
★ விசா

குறுகிய காலத்தவணையில் பெற்றுக் கொள்ள

## நிப்பொன்

ரெவி ரவல்ஸ் (PT) LTD
2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

B/1493

---

## நன்றி நவிலல்



மில்கவைற் தொழிலக தாபகர்
கந்தையாபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன்

**கந்தையா இரத்தினகோபால்**

அவர்களின்

மரணச் சடங்கில் பங்குபற்றி இறுதி யாத்திரையில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், தந்திகள் அனுப்பியோர், மலர் மாலை, மலர் வளையம் சாத்தியோர் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மில்க் வைற் இல்லம்.

B/1494

---

## மரண அறிவித்தல்

### திரு. அப்பாக்குட்டி கந்தசாமி

அப்பாக்குட்டி கந்தசாமி காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய உரக்கூட்டுத்தாபன களஞ்சியப் பொறுப்பாளரும், கைலைநாயகியின் கணவரும் தயாபரன், முரளிதரன், கிருபாகரன், சுதாகரன், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மூளாய் ஆசிரியமணி சோமசுந்தரம் (கந்தையா), திருமதி அன்னபூரணம் கந்தையா ஆகியோரின் அருமை மருமகனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (1986-08-26) அன்று பி. ப. 3.00 மணியளவில் மூளாயில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய், தகவல்:- பிள்ளைகளும், மாமியாரும்

R/25353

# கிளிநொச்சி கல்வி கந்தோரும் மூடப்பட்ட பாடசாலைகளும் 1ம் திகதி முதல் இயங்கும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களை யடுத்து மூடப்பட்டிருந்த ஐந்து பாடசாலைகளும் முதலாம் திகதி அடுத்த தவணை தொடங்கும் போது மீண்டும் திறக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், சென். திரேசா மகளிர் மகா வித்தியாலயம், சிங்கள மகா வித்தியாலயம், கனகபுரம் வித்தியாலயம், கனிஷ்ட மத்திய வித்தியாலயம் ஆகிய இந்த ஐந்து பாடசாலைகளினதும் ஆசிரியர்கள் இப்பாடசாலைகளுக்கு கடமைக்கு திரும்பவேண்டுமெனவும் தவறின் வேறு பாடசாலைகளுக்கு இடம்மாற்ற வேண்டியேற்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த தவணை நடாததப்பட முடியாமல் போன இரண்டாம் தவணைப் பரீட்சை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேரசூசியின்படி மூன்றும் திகதி ஆரம்பமாகும். இப்பரீட்சைக்கு தோற்றுது பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குரிய வினாத்தாள்கள் வேண்டிய அதிபர்கள் பரீட்சை செயலாளர் திரு. நா. தணிகாசலம் பிள்ளையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தற்காலிகமாக இயங்கிவந்த கிளிநொச்சி கல்வித்திணைக்களம் முதலாம் திகதி முதல் கரடிப்போக்கு சந்திக்கருகிலுள்ள நிரந்தரக்கட்டடத்தில் இயங்குமெனவும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கல்விப்பணிப்பாளரின் நன்றி

# ஆள்மாருட்டமோ, அசம்பாவிதங்களோ இன்றி பரீட்சை இம்முறை நடைபெற்றது

அண்மையில் நடந்தேறிய க. பொ. த. ப. (உயர்தர) பரீட்சையை வெற்றிகரமாகச் செயற்படுத்த உதவிய அனைவருக்கும் யாழ். கல்வித் திணைக்களத்தின் சார்பில் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நன்றி தெரிவித்துள்ளார்.

"இளஞ்சந்ததியினரின் எதிர்காலம் சமைக்கும் பரீட்சையாகையால் பல பெரியார்கள் மிகவும் உற்சாகத்துடன் எமது கல்வித் திணைக்களத்துக்கு உதவ முன்வந்தார்கள். பெற்றோர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள், அத்துடன் விழிப்புக்குழுக்கள், மாணவ அணிகள், கல்விஅபிவிருத்தி மன்றங்கள் மற்றும் பொதுநிறுவனங்கள் ஆகியவற்றின் முழுமையான பங்களிப்புகளும் இப்பரீட்சையைச் சிறப்பாக நடாத்துவதற்கு உவியளித்தன. இதற்காக உழைத்த சகலருக்கும் நன்றி கூறுகிறேன்."

பரீட்சை மண்டபங்களில் ஆள்மாருட்டமோ அன்றி எவ்வகையான அசம்பாவிதங்களோ இம்முறை இடம் பெறுமைக்கு இப்பெரியார்களின் ஈடிணையற்ற செயற்பாடுகளும் கல்வி உத்தியோகத்தர்களின் சிறப்பான சேவையுமே காரணமாக அமைந்தன எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகளும் ஊழியர்களும் யாவரும் விரும்பும் வகையில் சேவையாற்றியமையை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும் எனவும் இங்கு தெரிவிக்கப் பட்டது.

## இவை கூடாது

# வெற்றியில் பெருமிதம் தோல்வியில் சோர்வு

(வல்வெட்டித்துறை)

"வெற்றியைக் கண்டு பெருமிதமோ, தோல்வியைக் கண்டு சோர்வோ அடைந்துவிடாமல் நானும் பல விளையாட்டுக்களில கலந்து கொண்டேன் என்ற குதூகலிக்கும் முகங்களைத்தான், களங்கமற்ற இச்சிறுர்களின் முகங்களில் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த இள வயதிலேயே கடினமான பல விளையாட்டுக்களில் பங்குபற்றி சோர்வின்றி திறமையாக விளையாடும் இவர்கள், நாம் படிப்பில் மட்டுமல்ல விளையாட்டுக்களிலும் தீரர்கள் தான் என்பதனையும் நிருபணமாக்கிவிட்டனர். பாலர் பாடசாலைகளில் இப்படியான விளையாட்டுக்களை நடத்துவதன் மூலம், சிறுவயதிலிருந்தே திடகாத்திரமான தமிழ் சமுதாயத்தினை உருவாக்கும் பணி பாலர் பாடசாலை ஆசிரியர்களிடத்து ஒப்படைக்கப்படுகின்றது."

இவ்வாறு வதிரி தமிழ் மன்ற பாலர் பாடசாலையின் 16 வது ஆண்டு இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. வி. கிருபானந்தன் கூறினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வி. தில்லைநாதன் தமது சிறப்புரையில், "இச்சிறுர்கள் பலவிதமான, கடினமான விளையாட்டுக்களிலும் கலந்து கொண்டு காட்டிய திறமையையும், ஆர்வத்தினையும் பார்க்குமிடத்து படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி எதிலும் சளைத்தவர்களல்லர் என்பதனை காட்டிவிட்டனர்" என்றார்.

திருமதி பு. கிருபானந்தன் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். திருமதி சிவமலர் தங்கவேல் வரவேற்புரை வழங்க, செல்வன் சோ. மகேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினர்.

# 'சகல துறைகளிலும் மாதர் முதன்மை பெற்று மிளிர்வு'

(வல்வெட்டித்துறை)

"ஆணுக்குப் பெண் அடிமையல்ல, பெண்களும் பட்டங்களைப் பெறலாம்; நாட்டையும் ஆளலாம். பெண்கள் பல புதுமைகளைப் படைக்கலாம் என அன்று தீர்க்கதரிசிசுப்பிரமணிய பாரதி தன்பாடல்களில் படித்துவிட்டு, தமிழ்மக்கள் படும் இன்னல்களையெல்லாம் நான்காண பொறுக்க முடியாது என எண்ணியவன் போல எம்மை விட்டு நீங்கிவிட்டார். அத்தீர்க்கதரிசியின் கூற்றுக்களின்படி இன்று பெண்கள் சகல துறைகளிலும் முதன்மைபெற்றுவிளங்குவதை நாம் கண்ணூரக் காண்கின்றோம்."

இவ்வாறு பொலிகண்டி பாரதி சனசமூக நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மாதர் சங்க அங்குரார்ப்பண வைபவத்தில் மேற்படி நிலையத் தலைவர் திரு. வே. க. பாலசிங்கம் தனது தலைமையுரையில் கூறினர்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில், மாதர் சங்கம் எவ்வாறு செயற்படவேண்டும். சங்கத்தினரின்பொறுப்புகள் என்ன, இதனுல்பெறப்படும்நன்மைகள் யாது என்பன பற்றியும் விரிவாக விளக்கிக் கூறினர்.

பொலிகண்டி வீரபத்திரர் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் திரு. சி. மகாலிங்கம், கொற்றாவத்தை அ. மி. பாடசாலை முன்னாள் அதிபர் திரு ச. திருப்பதி ஆகியோர் மங்கள தீபம் ஏற்றி விழாவைத் தொடக்கி வைத்தனர்.

திரு. த. புவனேந்திரம், செல்வி. பொ. அருமைக்கிளி செல்வி. மா. தங்கமலர் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர். இவ்விழாவில், திருமதி பவளம் பாலசிங்கம் மாதர் சங்க தலைவியாகவும், செல்விகலாரஞ்சினி திருப்பதி காரியதரிசியாகவும், பொருளாளராக செல்வி ஜெயநிதி சிவப்பிரகாசமும் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு 21 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

# மருந்துகள் வந்தன

(புலோலி)

வடமராட்சி கிழக்குப்பகுதி ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களில் நிலவி வந்த மருந்து தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியும், வடமராட்சி கிழக்குப் பகுதி பதில் சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் கே. லலிதகுமாரின் நடவடிக்கையைத் தொடர்ந்து மருந்து வகைகள் கிடைத்துள்ளதாக ஆரம்பசுகாதாரகவனிப்பு நிலையங்களின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# ஒருவர் சிக்கினர்

(குருநகர்)

யாழ். கொய்யாத்தோட்டம், புதுவீதி விநாயகர்கோவிலடியில் இரவு கடை ஒன்றை உடைத்து திருட்டு நடாத்திய இரு இளைஞர்களில் ஒருவர் அயலவரின் முயற்சியால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். இன்னொருவர் ஓடித் தப்பிவிட்டார். அகப்பட்ட இளைஞரிடம் இருந்து திருடப்பட்ட ரொக்கப்பணம் மீட்கப்பட்டதுடன் காலைவரை மின் கம்பத்துடன் கட்டிவைக்கப் பட்டிருந்ததை அறிந்து வந்த முக்கிய அமைப்பொன்றைச் சேர்ந்தவர்கள் விசாரணைக்காக அவரைக் கூட்டிச்சென்றனர்.

# இறைபுகழ் பாடிவந்தால் இன்பவாழ்வு கிடைக்கும்

(சரசாலை)

"நாம் ஏன் பிறந்தோம்? மீண்டும் பிறவாமல் இருப்பதற்கே கடந்த காலம் மீண்டும் வராது எதிர்காலம் எவ்வளவு என்பது எமக்குத் தெரியாது எனவே நாம் உணர்ந்து நல்லன செய்தல் வேண்டும். வாழ்க்கையில்நாம் பேசுவதனை செயலில் செய்தல் நல்லது. சமயத்தை நன்ருக தெரியும் சமயத்தை உணர்ந்து நடக்கவேண்டும். இறைவனை அடைய அனுபவம் வேண்டும். இறைவனையடைய இறைநாமத்தை தினமும் சிந்திக்கவேண்டும். இறைவனையடைய - அனுபவிக்க சைவ வேதங்கள் வழி காட்டுகின்றன. நாவுக்கரசர் மீண்டு பிறவாமல் இருக்கவேண்டும் என கோரிப் பாடியுள்ளார். அவர் இயற்றிய பாடல்களை யாவது பாடினல் நல்லதாகும். திருநாம ஐந்தெழுத்தையும் தினமும் ஓத வேண்டும்."

இவ்வாறு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கந்தசுவாமி கோயில் கொடியேற்ற உற்சவ நாளன்று உரையாற்றிய ஆத்ம ஜோதி நா. முத்தையா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "மனிதன் எதிர் காலத்தைப்பற்றி சிந்திக்கின்றன். மிருகங்கள் எதிர்காலத்தை சிந்திக்காது வாழ்கின்றன. மனிதனுக்கும் மிருகத்துக்கும் வேறுபாடு உண்டு நாம் மனிதர்களாக வாழவேண்டும். மனிதர்களின் எதிர்காலம் நல்லதாக அமைய இறை சிந்தனை அவசியம். இறைவனை அறிந்து இறைவன் நாமத்தை ஓதவேண்டும் இறைவனுடன் தொடர்பு கொள்ள கட்டுப்பாடு கிடையாது. எனவே இறை நாமத்தை தினமும் சிந்திக்கலாம், பாடலாம்.

இந்த கலியுகத்திலே கண் கண்ட தெய்வமாக முருகப் பெருமானை வழிபடவேண்டும். கந்தபுராணத்திலே முருகனைப் பற்றி பெருமளவில் கூறப்பட்டுள்ளது அதனை படிப்பதன் மூலம் முருகப்பெருமானை அறியலாம். கந்தபுராணம் மிகச் சிறந்த திருமுறையாகும் என்ருர்.

# குடிசைக் கைத்தொழிலால் வேலைவாய்ப்பு பெறலாம்

(நீர்வேலி)

"எமது நாட்டின் பொருளாதார வளங்கள் பற்றியும், இயற்கை வளங்கள் பற்றியும் சரித்திரங்கள் நன்கு விளக்கம் கூறுகின்றன. எமது நாட்டில் மிகக் குறைந்த மூலதனத்துடன் எளிதாகக் கிடைக்கக் கூடிய மூலப்பொருளைக் கொண்டு குறைந்த மனித வலுவுடன் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளக் கூடியது தும்புத் தொழிலாகும். இதன் பயன் உணர்ந்து எமது வளங்களை அழியவிடாது பாதுகாக்கும் நோக்குடன் இன்று இத்தொழில் நிலையம் ஆரம்பிக்கப்படுகிறது".

இவ்வாறு, நீர்வேலி வாழைக் குலைச் சங்க மண்டபத்தில் பல்தொழில் நிறுவனங்கள் வரிசையில், தும்புத் தொழில் நிறுவனம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றிய கோப்பாய் உதவி அரச அதிபர் திரு. கே. சபாபதிப் பிள்ளை கூறினர்.

வாழைக்குலைச் சங்கச் செயலாளர் திரு. சி. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்றைய இளம் சமூகத்ினரை எதிர் நோக்கியுள்ள மாபெரும் பிரச்சினைகளில் ஒன்று தான் வேலையில்லாத் திண்டாட்டம். சில இளைஞர்களின் ஊக்குவிப்பு நடவடிக்கையால் பல்தொழில் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் திறக்கப்படுவதால் பலர் வேலைவாய்ப்புகளைப் பெறலாம். எமது கிராமத்திற்கு தேவையான தும்பினல் செய்யப்படும் பொருட்களை எமது கிராமத்திலேயே பெற இத்தொழிலகம் உதவி புரியும். அந்நிய வளங்கள் எமது கிராமத்தை ஆக்கிரமிப்பதை நிறுத்தி எமது வளங்களை கொண்டு எமது தேவையை பூர்த்தியாக்குவோமாக! என்ருர்.

# பனை பயன்பாடு இவர் பரவசம்

(சுண்டுக்குளி)

தற்போதுள்ள சூழ் நிலையிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பனை வள அபிவிருத்திப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவதாக இலங்கைப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜச் செயலாளருமான திரு நடராசா கடந்த சில தினங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளிலுள்ள தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளையும், பனம் பொருள் உற்பத்தியாளர்களையும் சந்தித்து உரையாடிய அவர் புதிய பனை அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டார்.

புதுக்குடியிருப்பு தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசுகையில், 'யாழ். மாவட்டம் ஐம்பது வருடங்களுக்கு மேலாகக் கூட்டுறவுத் துறையில் பிரகாசித்து வருகின்றது. இது போல முல்லைத்தீவு மாவட்டமும் குறுகிய காலத்தில் கூட்டுறவுத் துறையில் அடைந்துள்ள வளர்ச்சி முன்மாதிரியானதாகும்,' என்று பாராட்டுத் தெரிவித்தார்.


உ

முருகா

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986



இன்று 18-ம் திருவிழா

வெண்பா

கந்தப்பச் செட்டி கடைபோட் டிருக்கிறன்!
வந்தால் அருட்கனிகள் வாங்கலாம்—முந்துங்கள்!
நல்லூர்த் திருவீதி; நல்ல மலிவு; வழி—
சொல்லுகிறேன் போனற் சுகம்!

— சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப பிரசுரிப்பவர்கள் — 'ரெபகுளோப'

ஈழமுரசு

### உதய சிந்தனை

பொய், புறங்கூறல், வீண்பேச்சு, முதலியவற்றை நீக்கி மெய்மை அடக்கம் இன்சொல் முதலியவற்றை மேற்கொள்ளுங்கள். வாயில் கண்ட வார்த்தைகள் நுழையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

—கௌதம புத்தர்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

27-8-86 புதன்கிழமை (அக்ஷய) ஆனி 11

# பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லுங்கள்

யாழ்ப்பாண நகரில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் காரணமாக, இங்குள்ள இரண்டு பிரதான பாடசாலைகளுக்கு ஏற்பட்டுவரும் தொடர்ச்சியான பாதிப்புகள் பற்றி செய்திகள் வெளியாகிவருகின்றன.

வேம்படி மகளிர் பாடசாலை, மத்திய கல்லூரி ஆகிய இரண்டுமே தொடர்ச்சியாகப் பாதிப்படைந்து வரும் பாடசாலைகளாகும்.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் வேம்படி மகளிர் பாடசாலை ஆறுதடவைகள் இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

ஆயிரத்துக்கும் அதிகமான பெண்கள் கல்விபயிலும் இப்பாடசாலை இலங்கையின் தேசியதர மட்டத்திலான பாடசாலைகளில் ஒன்றாகும்.

அதிர்ஷ்டவசமாக வகுப்புக்கள் நடைபெறாத நேரங்களில் இத்தாக்குதல்கள் இடம்பெற்று வந்துள்ளதால் மாணவிகள் எவரும் காயமடையவோ, உயிரிழக்கவோ இல்லையென்றாலும், இங்குள்ள விடுதியில் தங்கியிருக்கும் மாணவிகள் பெரும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

பாடசாலை அதிபரும் கூட தமது குடும்பத்துடன் அங்குள்ள விடுதியிலேயே வசித்துவருகின்றது குறிப்பிடத்தக்கது.

இந்த விடயங்கள் ஏற்கனவே பல தடவைகள், இராணுவ அதிகாரிகளுக்கும் சிவில் நிர்வாக அதிகாரிகளுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்புகளில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்படமாட்டாதென்று காலத்துக்குக் காலம் கோட்டை இராணுவ அதிகாரிகளால் உறுதி கூறப்பட்டது.

ஆனாலும் நடைபெறுவது முற்றிலும் எதிரான விடயமாகும்.

பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆகியவைகள் எவ்வாறு மூடப்பட்டன என்பது எமக்குத் தெரியாததல்ல.

வல்வெட்டித்துறையில் சிதம்பராக் கல்லூரி எவ்வாறு மூடப்பட்டது என்பது எமக்குத் தெரியாததல்ல.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கூட "தற்காலிகம்" என்ற பெயரில் எவ்வாறு மூடப்பட்டதென்பது அனைவருக்கும் தெரியும்.

இதே பாணியில் வேம்படியையும், மத்திய கல்லூரியையும் மூடச் செய்வதற்குத்தான் இவ்வாறு அடுத்தடுத்து தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றதா?

ஆயிரம் மீட்டர் காரணத்தைக் காட்டி குடாநாட்டின் பிரதான கல்வி நிலையங்களை மூடச் செய்து, வடக்கின் கல்வி முன்னேற்றத்தை மழுங்கடிக்கச் செய்யும்திட்டமிட்ட ஒரு நடவடிக்கையாகவே இதனை நாம் கருத வேண்டியுள்ளது.

போதாக்குறைக்கு வேம்படியிலிருந்து பயங்கரவாதிகள் கோட்டை முகாமை நோக்கித் தாக்குதல் நடத்தியதாக அரசாங்க வெகுஜன தொடர்புச் சாதனங்களின் செய்தி அறிவிப்புகள் தொிவிக்கின்றன.

இராணுவத்தினரின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள வேம்படி மகளிர் பாடசாலையை, பயங்கரவாதிகளின் முகாமாக பொதுமக்கள் முன் படம் பிடித்துக் காட்ட எடுக்கப்பட்டுள்ள இம் முயற்சி பாடசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

அப்பட்டமான இந்தப் பொய்யான அறிவிப்பையிட்டு பாடசாலை அதிபர் தமது மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சின் செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அந்தச் செய்தியை மறுத்துள்ளார்.

வேண்டுமென்றே தவறான செய்திகளை அரசாங்கம் வெளியிடுவதை பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேம்படி ஒரு மகளிர் பாடசாலை, அங்குள்ள விடுதியில் மாணவிகள் இருக்கின்றனர். பாடசாலை அதிபரும் இங்கேயே வசித்து வருகின்றார்.

இவைகளைச் சரியாக அறியாது, அங்கிருந்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துகின்றனர் என்று கூறுவதை "பச்சைப் பொய்" என்று கூறாமல் வேறெப்படிக் கூறுவது?

பொய்யைச் சொன்னாலும், பொருந்தச் சொல்ல வேண்டும்

"வேண்டாத விருந்தாளிகள்" என்ற தலைப்பில் ஜெனிவாவிலிருந்து சித்ரா சுப்பிரமணியம் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம். இக்கட்டுரை 'புரன்ட் லைன்" சஞ்சிகையில் வெளியானது.

# வெளிநாடுகளுக்குச் செல்லும் தமிழர்களிடம் இருப்பது மனத்தைரியமும் துணிச்சலுமே!

ஆரம்ப வாத விவாதங்கள் அவர்களது பயணம் பற்றியனவே தவிர, அவர்களுடைய அதோகதி பற்றியன அல்ல. இலங்கையிலிருந்து ஆயிரமாயிரம் இளம் தமிழர்கள் ஐரோப்பாவில் வந்திறங்கிய வண்ணமாக இருந்தனர். இந்த வருகையை நிறுத்தியாக வேண்டி இருந்தது. அவர்கள் ஏன் வந்தபடியே இருக்கிறார்கள்? இப்படிக் கேட்டு 'அலட்டிக்கொள்ள' எவருமே கரிசனை கொள்ளவில்லை. இந்த ஐம்பதினாயிரம் தமிழர்களில் மிக அதிகமானோர் கிழக்கு ஜேர்மனி வழியாகவே வந்திருந்தனராகையால் மேற்கு ஐரோப்பியர்கள் அதனுள் ஏதோ சதி இருப்பதைக் கண்டனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சதிதான் இது என மேற்கு ஐரோப்பியர்கள் தர்க்கம் தொடுத்தனர். பொருளாதார வாய்ப்பு வளம் நாடி இலங்கையிலிருந்துவருவோரை உற்சாகப்படுத்தி, மேற்கு ஐரோப்பாவினுள் அவர்களைப் புகுத்தி, நிரயபி வழியச் செய்பவர்கள் இக்கிழக்கு நாட்டவர்கள் தாம் என அவர்களைச் சாடினர் மேற்கினர்.

பொருளாதார வாய்ப்பு வளம் தேடிக் குடிவருவோர் இக்கருத்துத் தோற்றம், இந்த 'இமேஜ்' நிலைத்து அவர்களோடு ஒட்டிக் கொண்டது. முழு ஐரோப்பாக் கண்டமும் தொழில் வாய்ப்பின்மை, அந்நியர்பால் சந்தேகம், அச்சம், வெறுப்பு மனப்பான்மை என்பவற்றின் கோரப்பிடியில் சிக்கித் திணறியது.

பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானிய ஐக்கிய இராச்சியம் ஸ்கன்டினேவியா, சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து முதலாம் நாடுகளின் மக்கள் இக்குடிவருவோரையிட்டுத் தீர்க்கமான ஒரு முடிவு கட்டி விட்டனர்: வேலை தேடித்தான் இக்கடும் நிறமுள்ள, கட்டுமஸ்தான உடற்கட்டுள்ள மனிதர்கள் நம் நாடுகளுக்கு வந்துள்ளனர். சித்திரவதை, கொலை, அரசின் அடக்கியொடுக்கு முறைபற்றி இவர்கள் சொல்வன எல்லாம் வெறும் கட்டுக் கதைகளே தவிர, வேறல்ல. இந்த அட்டூழியங்கள் யாவும் போலந்திலும், செக்கோஸ்லோவாக்கியாவிலும் மட்டுமே நேர்வன. இலங்கைத் தீவிலா? ஒருபோதும் இருக்க முடியாது. எங்கோ வெகுதொலைவிலுள்ள காந்தம், அமைதி தவழும் இலங்கைத் தீவில் தேயிலைச் செடிகள் வளரும்; தென்றலில் தென்னை மரங்கள் மெல்லென அழகுற அசைந்து ஆடும்.

ஐரோப்பாவில புகலிடம் தேடிவரும் தமிழருக்கு நேர்ந்த அனுபவங்களுள் மிக மோசமானது இதுவரை இனங்காணப்படாத பகைவனிடமிருந்து தப்பியோடுவதேயாகும். இந்த வருகைகள், வரவேற்புகளை அவதானித்தவர்களுள், மனித உரிமைகள் இயக்கச் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு கொண்ட ஒருவர்: 'இந்த இலங்கையர்கள் கொமியூனிச எதிர்ப்பாளராகவும் வெள்ளை நிறத்தவராகவும் இருந்திருப்பார்களானால் மனமுவந்த வரவேற்புப் பெற்றிருப்பார்கள்' ஆனால், தமிழர்களிடம் இந்த இரண்டு தன்மைகளில் ஒன்றுதானும் இல்லையே. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் இங்கு வரத் தொடங்கினார்கள். இங்குள்ளோர் இன்று கூட இவர்கள் பிரச்சினை பற்றி அறிந்திருப்பவற்றில் பாதிகூடச் சரியானதல்ல. மனித உரிமைகள் இயக்கச் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடுடைய அந்த ஆள் இவ்வாறாக எடுத்துக் கூறினார்.

தொடர்ந்தும் அவர் கூறியது பெருமாறு;' முதற்கண், இவர்கள் இங்கு வருவதை இங்குள்ள மக்கள் விரும்பவில்லை. இவர்களது வருகையை விரும்பாதபடியால், இவர்கள் சொல்வதை அறியவும் இங்கு எவராவது விரும்புவது கிடையாது' என்கிறார். அகதிகளுக்கு உதவுவதற்கான சுவிஸ் நடுவத்தைச் சேர்ந்த உவேற்றர் ஸ்ரொக்லி.

'இலங்கைத் தமிழ் அகதிகள் ஐரோப்பாவுக்கு வந்திறங்கிய சமயம் வலதுசாரி அரசியலில் ஓர் எழுச்சி ஏற்பட்டுக் கொண்டு இருந்தது. உள்ளூர் வாசிகளுக்குத் தொழில் வாய்ப்புகள் மிகவும் வேண்டியிருந்த காலம் அது. இவற்றுக்கு, தமிழர் வருகை ஒரு மிரட்டலாக அமைந்தது. இவ்விடயத்தில் நிலையான அக்கறையுடையோர் இதனைக் கண்டுகொண்டனர்.

'அந்நியரை வெறுக்கும் மனப்பான்மை உச்சக்கட்டத்தில் இருந்தபோது இலங்கைத் தமிழர்கள் இங்கு வந்து சேர்ந்தார்கள். அத்தகைய பொதுசன அபிப்பிராயம் மிக முக்கியமானது. அதனைப் பொருட்படுத்தாது தமிழர்களை இருகரம் கூப்பி வரவேற்க அரசியல்வாதிகள் தயாராக இருக்கவில்லை. இங்ஙனம் கூறி முடித்தார் ஸ்ரொக்லி.

இதற்கு நேர்மாறான வேறொரு அகதிகள் கதை இதோ இது நிகழ்ந்து இன்னமும் வெகு நாட்கள் ஆகவில்லை. இந்தோ-சீன தேசத்திலிருந்து ஆயிரக் கணக்கில் அகதிகள் குடும்பங்கள் இங்கு வந்து சேர்ந்தன. ஐரோப்பா இவர்களை மனம் உவந்து வரவேற்றது. காரணம் வெகு விநோதமானது; சுலபமானதும் கூட. இக்குடும்பங்களுடன் கண்ணுக்கினிய, குளு குளுவென்றிருக்கும் கைக்குழந்தைப் பாப்பாக்கள் நிறையப்பேர் வந்து சேர்ந்தார்கள். அவர்களது நல்வரவேற்புக்கு இது ஒரு வேளை காரணமாக இருந்திருக்கலாம். இவர்களினின்றும் வேறுபட்டவாறாக, 'தமிழர்கள் இளவயது வாலிபர்கள். தொழிலில் அமரத் தயாரானவர்களாக இவர்கள் இருக்கின்றனர்.' என்கிறார் ஸ்ரொக்லி.

சரியான எண்ணிக்கைத் தரவுகள் கிடைக்கக் கூடியனவாக இருக்கவில்லை. ஆனால், ஐரோப்பாவில் ஊன்று தங்கியுள்ள அகதித் தமிழர்களின் தொகை அண்ணளவாக ஐம்பதினாயிரமாக இருக்கும். இவர்களிற் பெரும்பாலானவர்கள் பதினெட்டு முதல் முப்பத்தைந்து வயதினர் ஆவர். தேசவாரியாக, மேற்கு ஜேர்மனியில் உச்சத் தொகையாக இருபத்திரண்டாயிரம் தமிழர் உள்ளனர்; அதற்கு அடுத்து வரும் பிரான்ஸில பத்தொன்பதினாயிரம் தமிழ் அகதிகள் உள்ளனர்.

கொழும்பு, மொஸ்கோ, கிழக்கு ஜேர்மனி வாயிலாக மேற்கு ஐரோப்பாவில் இத்தமிழ அகதிகள் வந்து சேர்ந்தனர். அவர்களது கையிற் காசோ கிடையாது. பொதி பொட்டலங்களும் மிகச் சொற்பம். ஆனால் ஒன்று மட்டும் போதிய அளவு அவர்களிடம் இருந்தது: மனத் தைரியம், துணிச்சல். நாடுகளின் எல்லைகளைச் சட்ட விரோதமாகவே அவர்கள் கடந்து வந்திருந்தார்கள். 'உயிர் தப்பிப் பிழைத்து ஓடிவரும்போது 'ட்ரவெல் ஏஜன்ற்' மூலமாக எவரும் வெளிநாட்டுக்குப் பயணமாவது இல்லையே?' என்கிறார் எஸ். தம்பிப்பிள்ளை எனும் பெயரிய யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர். இலங்கையில் 1983, ஜூலை, ஓகஸ்ட் இனக் கலவரங்களை உடனடுத்து ஐரோப்பாவுக்கு அவர் வந்து அடைந்தார்.

அந்நாட்களின் பின்னர், மேற்கு ஜேர்மனியின் எல்லைகளில் காவல, சுற்றுக் காவல், கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. அது கண்ட தமிழர்கள் இத்தாலியூடாக ஐரோப்பாவினுட் புகுந்தனர். என்றென்றைக்கும் இங்கேயே தங்கி நிற்பதற்கென்று நாம் இங்கு வந்தவர்களல்லர் - எமது இலங்கை நாட்டுக்கு மீண்டு, பாதுகாப்பாக, நாம் அங்கு வாழும் நாள் வரும்வரை இங்கு தரித்து நிற்கவும்; அதுவரை தன்மானத்துடன் இந்நாட்டில் வசிக்கவுமே நாம் விரும்புகிறோம். நாம் கோரிநிற்பது அவ்வளவே" என்றார் தமிழ் அகதி பி. முத்துலிங்கம்.

ஒரு தமிழ் அகதியாக இலங்கையைவிட்டு வந்து ஐரோப்பாவின் வாயிற் கதவிற் தட்டும் ஒருவருக்கு என்ன நடக்கும்? அவருக்கு "நல்வரவாகுக!" என வரவேற்புக் கிடைக்காது என்பதை மட்டும் அவர் தெளிவாக உணர்ந்து கொள்வார். அவர் ஒரு வேண்டா விருந்தினர் என்பது உடனேயே அவருக்குப் புரிந்து விடும் 'ஆயினும், காரியம் அத்துடன் முடிந்துவிடவில்லை' ஏன் தெரியுமா?

அகதிகளை, வெளிநாட்டிலிருந்து தஞ்சம் கோரி வரும் அகதிகளை, நடத்துவது பற்றிச் சர்வதேச உடன்படிக்கையொன்று முப்பது வருடங்களுக்கு முன்னரே கைச்சாத்தாகியுள்ளது. இது 1951ஆம் ஆண்டின் ஜெனீவா கொனவென்ஷன் எனப்படும் ஐரோப்பாவிலுள்ள இத்தேசங்களில் அனேகமானவை இந்த ஒப்பந்தத்தின்கண் ஒப்பம் இட்டுள்ளவர்கள் ஆவர். ஆகவே இலங்கைத் தமிழ் அகதிகளையும் உலகின் ஏனைய நாடுகளிருந்து புகலிடம் தேடிவரும் அகதிகளுடன் சரிசமானமாக நடத்தும் கடப்பாடு இந்நாடுகளுக்கு வாய்ந்துள்ளது.

— தொடரும்

★ ஆலய திருநாள் கட்டுரை

## யாழ்ப்பாண குருநகர் புனித ஆரோக்கியநாதர்

யாழ்ப்பாணம், குருநகர் கடற்கரை வீதியில் கிருபானம் கொண்டு எழுந்தருளி, பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேண்டிய நலன்கள் புரிந்து வரும் புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்த திருநாள் (27-8-86) இன்றாகும். யாழ்ப்பாணத்தில் மிகவும் பழைமை வாய்ந்த சுமார் 50 வருடங்களுக்குமுன்பு ஸ்தாபிக்கப்பட்ட இப் புனிதரின் ஆலயம். 1984 ஆம் வருடம் புதிய வடிவமைப்புக் கொண்ட ஆலயமாக கட்டி முடிக்கப்பட்டு யாழ். ஆயர் மகா வந்தணைக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் மந்திரித்து திறந்து வைக்கப்பட்டது. 1938 ஆம் ஆண்டு வண. யூஜின் குருசோவிறதர் (ஐரோப்பிய துறவி) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டஇவ் ஆலயத்தை நாடி, புனிதரிடம் அருள் வேண்டி தங்களில் ஏற்பட்ட மாற்றங்களை அநேக பக்தர்கள் அனுபவித்து வந்துள்ளனர். அருள்மழை சிந்தும் அருளதிபனாக புனித ஆரோக்கியநாதரை இன்றும் பய பக்தியுடன் ஏற்று அவர் மீது அன்பை பொழிந்து அவரை சேவித்து வருகிறார்கள்.

இறைவனின் மேல் நம்பிக்கை என்கிற பந்தத்தினால் கட்டுண்டிருக்கிற நாம் அந்த இறைவனுக்கும் எமக்கும் இடையே இருக்கின்ற இடைவெளிகளை குறைக்க குறைக்க எமது சக்தியை நாமேபெருக்கி கொள்கின்றோம். ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்றார் வள்ளுவர் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறை தெய்வத்தினுள் சங்கமமாபவர்கள். அவர்கள் தெய்வமாக மாற முடியாது தெய்வமும்அல்ல, ஆனால் தெய்வத்தினுள் வைக்கப்படுவர்கள் தெய்வத்துடன் ஒன்றிப்பவர்கள் தெய்வத்தால் மாட்சிமைபடுத்தப்படுவர்கள். இதனாலேயே திருச்சபையும் புனிதர்கள் என அவர்களைப் போற்றுகின்றது. அவர்களை மகிமைப்படுத்துகின்றது அவர்கள் மூலப் அந்த பேரானந்த பெருஞ் சோதியாகிய இறைவனை துதித்து வணங்குகின்றது. இவ்வாறான பக்தர்களின் பக்தி நிலையில் வாழ்வாங்கு வாழ்ந்த புனித ஆரோக்கியநாதரின திருநாளில் இன்று, எத்தனையோ இன்னல்கள், இதயக் குமுறல்கள், அமைதியின்மைகள், அசம்பாவிதங்கள், மத்தியிலும் தவிக்கின்ற நெஞ்சுடன் புனிதரைப் போற்றி மகிமைப்படுத்தி அவர்மூலம் நம் நாட்டில் அமைதி நிலவ இறையன்பு படர நம்பிக்கையுடன் சேவிக்கின்றோம்.

வி. எம். ஜி. ஜெயந்தன்


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு மேசன், தச்சு, வீதி திருத்தம், விவசாயம் தொழிலாளர் போன்ற பதவிகட்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

தீவுப் பகுதி மக்களின் நலன்கருதி எமது கிளை ஸ்தாபனம் ஒன்று ''ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்'' என்னும் பெயரில் வேலணை, வங்களாவடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொடர்பு:
பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
வங்களாவடி சந்தி, வேலணை. B/1490

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மனி ★ சவூதி அரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labourers) மேசன், தச்சுத் தொழிலாளர் எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**M. முருகையா,**
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

B/1489


# அணிசேரா மாநாட்டில் தென்னாபிரிக்கா பிரச்சினை

(ஹராரே)

**ஸிம்பாப்வேயில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டுக்கான ஆயத்தங்கள் தற்போது நடைபெறுகின்றன. நேற்று இங்கு இந்த நாடுகளின் உயரதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

இம் மாநாட்டுக்கு முன்னோடியாக நாளை வியாழன், மறுநாள் வெள்ளிக்கிழமை வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு இடம்பெறும்.

தென்னாபிரிக்க சம்பவம், அதன் மீதான பொருளாதாரத் தடை, வளரும் நாடுகளின் ஒத்துழைப்பு, வளைகுடா போர், அணுவாயுதக் குறைப்பு என் கப்படும் எனவும் தெரிவிக்கப் பன இம்மாநாட்டில் விவாதிக் படுகிறது.

## கமறூனில் எரிமலை வெடிப்பு 1200 பலி

(லண்டன்)

ஆபிரிக்க நாடான கமறூனில எரிமலை வெடித்து விஷக் காற்று வெளியாகியதால் 1200 பேர் மடிந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் இறந்தோர் எண்ணிக்கை இரண்டாயிரமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த எரிமலை கடந்த வெள்ளிக்கிழமை வெடித்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது பற்றிய ஆராய்ச்சியினை பிரிட்டிஷ் பூகற்ப வியலாளர் மேற்கொண்டுள்ளனர்.

## இணைவு

(புதுடில்லி)

காங்கிரஸ் (ஜெ) நேற்று இந்திரா காங்கிரஸுடன் இணைந்தது. ஜெகஜீவன் ஸ்தாபகராகக் கொண்ட இக் கட்சி அவரது மனைவி இந்திராணிதேவியைத் தலைவராகக் கொண்டு சிறிது காலம் இயங்கியது.

## சமய அறிவுப் போட்டி

(புலோலி)

பருத்தித்துறை, புலோலி மேற்கு, சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜையையொட்டி மாணவ, மாணவிகளுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆத்திசூடிப் போட்டியில் செல்வி கே கிருபாலினியும், கொன்றைவேந்தன் போட்டியில் செல்வி ரீ. ஜெயவதனியும், உலகநீதிப் போட்டியில் செல்வி கே. சுகந்தினியும், சுந்தரர் பாடல்போட்டியில் செல்வி என். தவதேவியும், வெற்றிவேற்கைப் போட்டியில் செல்வன் வி. கிருஷ்ணகாந்தனும், முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

வித்தியாலய அதிபர் திரு. என். சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக் குருபூஜையிலேபோட்டிகளில்வெற்றியீட்டியமாணவ, மாணவிகளுக்கான பரிசில்களை பாடசாலை அபிவிருத்திச் சபை போஷகர் திரு. வி. கந்தையா வழங்கினார். இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். அருளம்பலம் சிறப்புரையாற்றினார். ஆசிரியர் திரு. வீ விநாயகம் கூட்டுப் பிரார்த்தனைநடாத்தினார்.


## மண்ணுலகில்

45-வது வயதினை எட்டிப்பிடிக்கும் தருணம் கண்டு வஞ்சகம் தீர்த்தானே கயவனவன்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 20 | | 18 |
| 08 | | 12 |
| 1941 | | 1985 |



இப் பிறந்த தினத்தில மறைந்த தினத்தை தரிசித்து
அன்னையவள் பாதங்களில் சமாப்பிப்போம்
பாரினிலே பூத்திருக்கும் கோடி விண்மீன் போதாதன்றோ —இப்
பூவுலகில் சூரியனே உன்னை விண்மீனாய் ஆக்கினானோ-அவ்
வஞ்சம் கொண்ட கயவன் அவனில் துளிபாசம் இனும் பூக்கலையோ -பூவுலகில்
பரதவிக்கும் பிள்ளைகளைப் பார்க்க இன்னும் வரம்தர வில்லையோ
விழியின் வெண்திரையினிலோர் கருவிழியும் தோன்று தம்மா—அக்
கருவிழியே இல்லையெனில் இத்தரையுலகே தோன்று தம்மா—எம்
வாழ்க்கை போல் வெண்திரையில் இனி கருவிழி நீ தோன்றுயாம்மா—உன்னில
பாசம் வைத்த எங்கள் நெஞ்சம் உந்தன் விழிதேடித் தவிக்குதம்மா
நண்பர்கள் பலகொண்டோம் இங்கு உறவினரும் சில கொண்டோம்—ஆனால்
தாயே என்று நாம் அழைக்க எமக்கு உன்னைவிட்டால் எவரும்காணோம்—அன்று
வாய்ச்சொல்லால் அறிந்திருந்தோம் தெய்வமும் நமக்கு அன்னை என்று—இங்கு
தெய்வம் இனும் வரவில்லை நீயாகுதல் இனி வருவாயோ
அன்னை இல்லாக் குறையினை எம்மவர்க்கு தீர்ப்பாயோ.

R/25354
உந்தன் பிரிவால் வாடும்
துணைவர், பிள்ளைகள், அன்னை, சகோதரர்கள்.

## மூவாண்டு நினைவஞ்சலி

**A. C. நாகராசா S. L. A. S.**
முன்னாள் உதவி அரசாங்க அதிபர் (யாழ்.)
தோற்றம்: 28-12-1927 மறைவு: 27-08-1983



அன்பின் திருவுருவாய்
அறிவின் பிறப்பிடமாய்
பண்பின் ஒளிச்சுடராய்
இனியவராய் குடும்ப விளக்காய்
மக்கள் தலைவனாய்வழிகாட்டி
எம்முடன் வாழ்ந்ததை ஒரு
பொற் கனவாக்கி மீளாத்
துயிலால் எம்மை துன்பக்
கடலில் மீளாதிருத்தி
மாளாத் துயரில்ஆழ்த்தி விட்ட
அன்புத் தெய்வமே!

நீங்கள் மறைந்து 3 வருடங்கள்
ஆகிவிட்டன உங்கள் ஆத்மா
சாந்தி அடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கும் உங்கள்
அன்பின் பிரிவாய் துயரும்

தேவி வாசா,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
R/25308

ஈழமுரசு

## ஹெலிகப்டர் படுத்திய பாடு!

(காவலூர்)

நேற்று புங்குடுதீவை நோக்கிப் பிரயாணிகளுடன் வந்துகொண்டிருந்த மினி பஸ் ஒன்றை வேலணைத்துறையூரில் வைத்து ஹெலிகொப்டர் ஒன்று மிகத் தாழப் பறந்து வந்து மறித்தபோது பிரயாணிகள் மினிபஸ்ஸை விட்டு இறங்கி அருகிலிருந்த கடலில் குதித்து தப்ப முயன்றனர். எனினும், ஹெலிகொப்டர் மேலும் தாழப்பறந்து பிரயாணிகளை வட்டமிடத் தொடங்கியது. இதனையடுத்து பிரயாணிகள் தமது கைகளை மேலே உயர்த்தியவண்ணம் செய்வதறியாது நின்றதை அவதானித்துவிட்டு அவர்களைச் செல்லுமாறு சைகை காட்டிவிட்டு ஹெலிகொப்டர் சென்றுவிட்டது.

கல்வி அமைச்சு செயலாளரிடம் கூறினார்

# வேம்படியில் போராளிகள் முகாமா?

# கல்விப் பணிப்பாளர் முற்றாக மறுக்கிறார்!

யாழ்ப்பாணம் கோட்டை முகாம் மீது தீவிரவாதிகள், வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்தே தாக்குதல்களை நடாத்திவருவதாக அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் அறிவித்து வருவதை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மறுத்துள்ளார். இது பற்றி கல்வி அமைச்சின் செயலாளர் திரு. விஜயமானேயுடன் அவர் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியுள்ளார்.

இப் பாடசாலை ஒரு மகளிர் கல்லூரி எனவும், இங்கே மகளிர் விடுதி இருப்பதாகவும் இதன் அதிபரும் குடும்பத்துடன் பாடசாலை வளவில் தங்கியிருப்பதாகவும் தெரிவித்த கல்விப் பணிப்பாளர் இங்கே வெளியார் எவரும் செல்லமுடியாது என்றும், இதில் க. பொ. த (உயர்தர) பரீட்சை மண்டபமும் இருப்பதாகவும் அமைச்சின் செயலாளருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில நாட்களாக கோட்டையில் இருந்து ஏவப்படும் ஷெல் தாக்குதல்களினால் இப் பாடசாலை ஐந்து தடவைகள் தாக்கப்பட்டு சேதமடைந்துள்ளதுடன் பலத்த நஷ்டமும் ஏற்பட்டதாகவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இதன் விபரங்கள் மற்றும் இப் பாடசாலையின் சேதங்கள் என்பனவற்றை தமக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் யாழ். கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு

## பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கு 30 பேர் தெரிவு

கிழக்கிலங்கை பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு யாழ். மாவட்டத்திலிருந்து முப்பது மாணவர்கள் புதிய ஆண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பல்கலைக் கழகம் அடுத்த மாதம் 15-ம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்கள் அனைவரும் 14-ம் திகதியே அங்கு சமுகந்தரவேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, இம்மாணவர்களின் பிரயாண ஒழுங்குகள் பற்றி ஆலோசிப்பதற்காக நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாகவுள்ள சென்ஜோன் அக்கடமியில் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

காலை பத்துமணிக்கு நடைபெறும் இக் கூட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சகல மாணவர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

## இவர்களுக்கு 28ம் திகதி பென்ஷன் வழங்கப்படும்

யாழ்ப்பாணம் தபாற்கந்தோரிலும் சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை அல்லைப்பிட்டி, பிடாரிக்கோயிலடி ஆகிய உப தபால் கந்தோர்களிலும் "பென்ஷன் பணம் பெற்றவர்களுக்கான கொடுப்பனவு இம்மாதம் இருபத்தெட்டாம் திகதி வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து வழங்கப்படவுள்ளது.

யாழ். தபால் கந்தோரிலும் அதன் கீழ் இயங்கும் உப தபால் கந்தோரிலும் பென்ஷன் எடுத்தவர்களுக்கான கொடுப்பனவுகள் இருபத்தொன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்படும்.

பென்ஷன் கொடுப்பனவுத் திகதிகளுக்கு முதல் நாளே அதற்கான "வவுச்சர்களை" இரண்டாம் குறுக்குத் தெருவில் இயங்கும் தபால் கந்தோரில் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பணக் கொடுப்பனவு நடைபெறும் இடத்தில் வவுச்சர்களை பெறமுடியாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுப்படைத் தளபதி ரணதுங்கா கூறுகின்றார்:

## ஆத்திரமூட்டப்படுவதால் ராணுவத்தினர் உணர்ச்சிவசப்படுகின்றனர்

(கொழும்பு)

தீவிரவாதிகள் கோட்டை இராணுவமுகாம்மீதான தாக்குதலுக்கு பண்ணைத் தொலைத்தொடர்பு அலுவலகத்தையும், யாழ் அரசினர் வைத்தியசாலையையும் தமதுதளமாகப் பயன்படுத்துகின்றார்கள். இருந்தபோதலும் இராணுவத்தினர் தீவிரவாதிகளுக்கெதிரான தாக்குதலின்போது இந்த இரு ஸ்தாபனங்களுக்கும் தீங்கு ஏற்படாதவாறு நடந்துகொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளனர் எனக் கூட்டுப்படைகளின் தளபதி சிறில் ரணதுங்க கொழும்பில் வெளிநாட்டு நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நிருபரின் கேள்வியொன்றுக்கு சிறில் ரணதுங்க பதிலளிக்கையில் பாதுகாப்புப்படையினர் யாழ் நகரில் வரம்பு மீறிநடந்து கொண்டதை ஓரளவு ஏற்றுக்கொண்டதோடு தீவிரவாதிகளின் ஆத்திரமூட்டல் சம்பவங்களினால் இராணுவத்தினரின மனோநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதனால் அவர்கள் சில வேளைகளில் உணர்ச்சி வசப்படுகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார்.

பண்ணைவீதி மூடப்பட்டதினால் தீவுப்பகுதி மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி நான் அறிவேன். கோட்டை முகாம் மீதான தாக்குதலை தீவிரவாதிகள் கைவிட்டால் அப்பாதையை மீண்டும் போக்குவரத்துக்கு திறப்பது பற்றி ஆலோசிக்கலாம் எனவும் அவர் அந்த பேட்டியில் தெரிவித்தார்.

### மயானத்தில்...

குளத்தில் வைத்து கண்ணிவெடித் தாக்குதல நடத்தப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் அதிரடிப்படையினருடன் நேரடி மோதல் இடம்பெற்றபோது பிரான்ஸ் திலகம் (பாஷையூர் ராமு) என்ற தங்கள் போராளி வீரமரணம் அடைந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

### முறிகண்டி...

வற்று பிளைப்பதற்காக வந்த நான்குவிவசாயிகள் பரந்தனில் விற்று பணத்தைக் கொண்டு ஸ்கந்தபுரத்திற்குசெல்லும்வழியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது.

படுகாயமடைந்தவர்களான இளையகுட்டி பரராசசிங்கம் (51வயது), செல்வேந்திரன் (40வயது), பி. கலாசியஸ் (26 வயது), நடேசலிங்கம் (30 வயது) ஆகிய நால்வரும்யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### குண்டுகளும்...

இவ்விடத்துக்கு வந்தனர். அவற்றை எடுத்த பின்னரே ஒய்வூதியம் பெறுவோரை செல்ல அனுமதித்தனராம்.

### தமிழர்...

பிரிய வேண்டும் என்ற தீர்மானம் சங்கத்தின் ஆட்சி மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானம் என சங்கத்தின் முக்கிய நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

### கூட்டணியை...

தார்.

இந்த உண்மையை கூட்டணியினர் உணர்ந்து கொள்ள வேண்டுமெனவும் அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

இதேவேளை கூட்டணி பிரதிநிதிகள் விரும்பினால் அவர்கள் யாழ். கோட்டைக்கு சென்று அங்குள்ள நிலைமையை அவதானிக்கலாம். அப்போதுதான் உண்மை நிலைமையை அவர்களால் புரிந்துகொள்ள முடியும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

### தமிழ்மக்களின்...

திரு. விஜயதிலக்ககருத்துத்தெரிவிக்கையில், இப் பேச்சுக்களின் மூலம் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படுமென எமது கட்சி நம்பவில்லை. இதன் பின்னணியில் பெரியதொரு சூழ்ச்சியே உள்ளது. தமிழ்ப் போராளிகளை நிராயுதபாணிகளாக்குவதற்கே ஜனாதிபதி இத் திட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

மாகாணசபை மூலம் பிரச்சினை தீராது. இதனால்தான் தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடக்கூடாது என எமது கட்சி வலியுறுத்துகிறது. தமிழர்களின் பாதுகாப்புப் பற்றியோ, அவர்களின் பரம்பரிய பிரதேசம் பற்றியோ இதில் எவ்வித உள்ளடக்கமும் இல்லை. அதிகாரம் பரவலாக்கல் மட்டுமே இதில் உள்ளது. நினைத்தநேரத்தில்இதனை நீக்கும்உரிமையும்ஜனாதிபதிக்கு உண்டு. கூட்டணியினரும் இந் நிலையை மாற்ற எண்ணியே இப்பொழுது பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறார்கள். ஆனால் பிரேரணைகளில் சலுகைகளை விட்டுக்கொடுக்க ஜனாதிபதியால் முடியாது.

மாகாணசபைகளால் தமிழ் மக்களுக்கு அற்ப சலுகைகளாவது வழங்கப்படுமென்றால் இதனை எதிர்க்கும் சிங்கள இனவாதக் கட்சிகளை முறியடிக்க நாம் தயாராகவுள்ளோம். இச் சந்தர்ப்பத்தில் இடது சாரிகள் சிங்கள இனவாதிகளுக்கெதிராக கடுமையாகச் செயற்பட வேண்டியுள்ளது.

இந்திய அரசின் நிலைப்பாடு பற்றி இவர் விமர்சிக்கையில், இந்திய அரசுமீதுபோராளிகள் பூரண நம்பிக்கை வைக்க முடியாதென்றார். இந்திய அரசை தமிழ மக்களின் ஒரு நண்பன் என எண்ண முடியாது. இந்திய அரசு இலங்கை அரசுக்கும்-கூட்டணிக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி தமிழப் போராளிகளை நிராயுதபாணிகளாக்க முயல்கின்றதுஎன்றார்.

### பங்குபற்ற அழைப்பு

யாழ். கோட்டைஇராணுவ முகாமை உடன் அகற்றக்கோரியும் அண்மைக் காலமாகஇடம்பெற்று வரும் ஷெல் தாக்குதல்களைக் கண்டித்தும் இன்று மக்கள் நடவடிக்கைக்குழு நடத்தவுள்ள பிரமாண்டமான ஊர்வலத்தில் பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளச் செய்யுமாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் தனது கிளைகள் அனைத்தையும் கோரியுளளது.

மனித உரிமை மீறல்களையும், கொடிய கொலைபாதகச்செயல்களையும் தடுதது நிறுத்தும் போராட்டத்தில் மக்களின் பரந்த வெகுஜன எழுச்சி அவசியம் என்பதையும் இவ்வியக்கம் இதே வேளை குறிப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

## மின் கம்பத்தில் இருவர்

தமது ஒழுங்கைமீறி கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக தமது இயக்கத் தோழர் விஜீ, ஆதரவாளர் திலீப் ஆகியோருக்கு பகிரங்க தண்டனை வழங்கப்பட்டதாக புளொட் அறிவித்துள்ளது.

இவ்விருவரும் யாழ்நகரில் நேற்று ஒரு மணித்தியாலம் வெய்யிலில் கட்டிவைக்கப்பட்டார்கள்.

இணுவிலில் மேற்கொள்ளப்பட்ட 'வீடியோ டெக்', சுதுமலை மோட்டார் சைக்கிள் கொள்ளை தொடர்பாகவே இவர்களுக்கு இத் தண்டனை வழங்கப்பட்டதாகவும், விஜீ ஸ்தாபனத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் புளொட் அறிவித்துள்ளது.

## தமிழக மீனவரை திருப்பி அனுப்ப நடவடிக்கை

கடந்த புதன்கிழமை மீன் பிடிப்படகுடன் திசைமாறி குருநகர் கரையை வந்தடைந்த எஸ். பெருமாள் (40) எம். கங்கையப்பன் (50) எம். பாவாடை (55) என்ற மூன்று இந்திய மீனவர்களையும் மீண்டும் அங்கே அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்னார்காடு மாவட்டம், கடலூரைச் சேர்ந்த இம்மூவரும், கீழ்க்கரையில் இருந்து படகில் செல்லும் போது பாம்பன் பாலம் அருகில் வந்ததும் திசைமாறி இலங்கைக் கரைக்கு வந்துவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இம்மூவரையும் இந்தியாவுக்கு அனுப்புவதுபற்றி பாதுகாப்பு அமைச்சுடனும்,இந்திய தூதரக அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இந்திய தூதரக சட்ட ஆலோசகர் சட்டத்தரணி திரு. இ. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

## 2 அமைச்சர் மீது மோசடி வழக்கு

(சென்னை)

தமிழ்நாடு அரசின் இரு அமைச்சர்கள் மீதான பண மோசடி குற்றச்சாட்டு வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

தமிழ் நாடு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கே. காளிமுத்து. உள்ளூராட்சி துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் ஆகியோர் மீது சென்னை சமூக நல ஸ்தாபன செயலாளர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் இவ்விருவரும் அரசு வங்கிப்பணத்தில் ஐம்பத்தேழு லட்சம் ரூபாவை மோசடி செய்ததாகவும், இவர்களை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது. விசாரணை முடிவில் நீதிபதி திரு. வெங்கடேஸ்வர சுவாமி வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

### பொம்பர்...

கோபாலசிங்கம் ஜெயகோபால் (14வயது) ஆகிய இரு சிறுவர்களும் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 27-8-1986 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437